**MCOP. No. 127/2020**

P.W.1 - நதியா

தேதி: 06.10.2023

சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

என் கணவர் பெயர் ஆனந்த பத்மநாபன். பதிவு எண் டி என் 18 ஏ இ 8511 என்ற இருசக்கர வாகனமானது என் கணவர் பெயரில் இருந்தது. எனது கணவருக்கு இருசக்கர வாகனம் ஒட்டுவதற்கு உரிமம் இல்லை என்றால் சரியல்ல. எனது கணவருடைய ஒட்டுனர் உரிமத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேன். மோட்டார் வாகன ஆய்வறிக்கை காலம் 7ல் இறந்துபோன என் கணவருக்கு வாகனம் ஓட்ட உரிமம் இல்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது கணவர் விபத்து சமயத்தில் தலைகவசம் அணிந்திருந்தார். எனது கணவருக்கு வாகனம் ஒட்டுனர் உரிமம் இல்லை என்றும் விபத்து சமயத்தில் தலைகவசமும் அணியவில்லை என்றால் சரியல்ல. ஆற்காடு அருகில் உள்ள தங்க நாற்கர சாலையில் கிரீன் தண்டர் எதிரில் விபத்து நடந்தது. எனது கணவர் விபத்து சமயத்தில் மேற்சொன்ன சாலையில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வடக்கு பக்கமாக போககூடாத சாலையில் சென்றதால் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. எனது மாமனார் பெயர் தேசிங்கு. நான் 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். விபத்து சம்மந்தமாக என் மாமனார் தான் புகார் கொடுத்தார். முதல் தகவல் அறிக்கையில் எனது கணவர் தான் விபத்திற்கு காரணம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என் கணவரின் விபத்து வழக்கில் ஆற்காடு போலீசார் என்ன இறுதி அறிக்கை தாக்கல் செய்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. மேற்படி இறுதி அறிக்கையில் என் கணவர் தான் விபத்திற்கு காரணம் என்று வழக்கு முடிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது கணவர் மீது வெள்ளை நிற டாடா சுமோ மோதியதாக நான் நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது தவறு என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரரின் இருசக்கர வாகனத்தின் பதிவு எண் டிஎன். 73 பி 0139

என்றால் சரிதான். மேற்படி 1ம் எதிர்மனுதாரர் தான் மேற்கு திசையிலிருந்து கிழக்கு நோக்கி வந்து கொண்டிருந்தார் என்றும் அவர் மீது எந்த தவறும் இல்லை என்றால் சரியல்ல. மேற்படி பதிவு எண் டிஎன். 73 பி 0139 வாகனத்திற்கும் எனது கணவர் இறப்புக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. எனது மாமனார் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை. எனது மாமனாருக்கு வேப்பூரை சேர்ந்த சிவா என்பவர் விபத்து குறித்து போன் மூலம் தகவல் கொடுத்துள்ளார். என் மாமனார் மற்றும் மாமியார் உயிரோடு இருக்கிறார்கள். நான் அவர்கள் இரண்டுபேரையும் இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை. நானும் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை. விபத்து சம்மந்தப்பட்ட குற்றவியல் வழக்கில் பதிவு செய்யப்பட்ட மாதிரி வரைபடம் மற்றும் இறுதி அறிக்கையை இந்த வழக்கில் தாக்கல் செய்யாததற்கு காரணம் எதுவும் சொல்லவில்லை என்றால் எனக்கு தெரியாது. மேற்படி 2 ஆவணங்களும் இந்த வழக்கிற்கு எதிராக இருப்பதால் நான் அதை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் கணவர் இறப்புக்கு 1மற்றும் 2 எதிர்மனுதார்கள் பொறுப்பல்ல என்றும் இந்த மனு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

S JOHN SUNDARLAL SURESH

Digitally signed by S JOHN SUNDARLAL SURESH